**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : வான்மதி**

**நாள்: 07.07.2024** **நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

உலக புகழ் பெற்ற பூரி ஜெகன்நாதர் கோவிலில் இன்று நடைபெற்ற ரத யாத்திரையில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கலந்து கொண்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை முதல், 3 நாள் அரசு முறை பயணமாக ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு செல்ல உள்ளார்.

விக்ரவாண்டி சட்டப் பேரவை இடைத் தேர்தல் பிரச்சாரம் நாளை முடிவடைய உள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

ஐரோப்பிய மக்களவை தேர்தலுக்கான 2 ஆம் சுற்று வாக்குப்பதிவு புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் இன்று நடைபெற்றது.

குடியரசு தலைவர் (12)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு 4 நாள் அரசு முறை பயணமாக நேற்று ஒடிசா சென்றடைந்தார். புனித கடற்கரை நகரமான பூரி-யில் இன்று நடைபெற்ற ஜகன்நாதர், பாலபத்ரா, தேவி சுபத்ரா மற்றும் சுதர்சன் ஆகியோரின் உலக புகழ் பெற்ற ரத யாத்திரையில் அவர் கலந்து கொண்டார். நாளை புவனேஸ்வரில் வரலாற்று சிறப்பு மிக்க உதயகிரி மற்றும் கந்தகிரி குகைகளுக்கு சென்று அங்கு கலை மற்றும் கைவினை கல்லூரி, உத்கல் கலாச்சார பல்கலைக் கழக மாணவர்களுடன் அவர் கலந்துரையாட உள்ளார். மேலும், புவனேஸ்வருக்கு அருகில் உள்ள ஹரிதாமடா கிராமத்தில் பிரம்மகுமாரிகளின் தெய்வீக மையத்தையும் அவர் திறந்து வைக்க உள்ளார். அதனை தொடர்ந்து, நாளை மறுநாள் புவனேஸ்வரில் உள்ள தேசிய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 13 ஆவது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

*பிரதமர் 1 (16 )*

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை முதல், 3 நாள் அரசு முறை பயணமாக ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு செல்ல உள்ளார். ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் அழைப்பை ஏற்று மாஸ்கோ செல்லும் அவர் அங்கு நடைபெறும் 22 ஆவது இந்திய-ரஷ்ய வருடாந்திர மாநாட்டில் பங்கேற்று உரையாற்ற உள்ளார். அப்போது இந்தியா-ரஷ்யா இடையே நீடிக்கும் பல்வேறு உறவுகள் குறித்தும், புதிய உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், இரு நாட்டு தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்த உள்ளனர். தமது ரஷ்ய பயணத்தை முடித்துக் கொண்டு நாளை மறு நாள் ஆஸ்திரியாவிற்கு செல்லும் பிரதமர் திரு நரேந்திர மோடி, அங்கு, அந்நாட்டு பிரதமர், அதிபர் மற்றும் தொழிலதிபர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

கடந்த 41 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரியாவிற்கு செல்வது இதுவே முதல் முறையாகும். இது குறித்து ஆஸ்திரிய அதிபர் அலெக்சாண்டர் வான்டேர் பெல்லன் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இரு நாட்டு தூதரக உறவுகளின் 75 ஆண்டுகளை கொண்டாடும் இவ்வேளையில் இந்திய பிரதமரின் ஆஸ்திரிய வருகை

*பிரதமர் 2 (6 )*

முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என தெரிவித்துள்ளார். இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது, பல்வேறு புவிசார் அரசியல் சவால்களை ஒன்றிணைந்து எதிர்கொள்வது உள்ளிட்டவை குறித்து விவாதிக்க இந்த சந்திப்பு வாய்ப்பளிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதனிடையே, இதற்கு பதில் அளித்துள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த சந்திப்பின் மூலம், ஆஸ்திரியாவுடனான நல்லுறவு மேலும் வலுப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

*ரத யாத்திரை (10)*

உலக புகழ் பெற்ற பூரி ஜெகன்நாதர் கோவில் ரத யாத்திரை இன்று சிறப்பாக நடைபெற்றது. இன்று மாலை 5 மணிக்கு ஜெகன்நாதர் கோவிலின் சிம்ம வாசலில் இருந்து தொடங்கிய ரத யாத்திரையில், ஜகன்நாதர், பலபத்ரா, தேவி சுபத்ரா மற்றும் சுதர்சன் ஆகியோரின் ரதங்களை நாடு முழுவதிலும் இருந்து வந்திருந்த சுமார் 15 லட்சம் பக்தர்கள், பக்தியுடன் வடம் பிடித்து இழுத்து சென்றனர். முன்னதாக, ரத யாத்திரையை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரவுமதி முர்மு,

குடியரசு துணை தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்திருந்தனர். ரத யாத்திரையை முன்னிட்டு அம்மாநிலத்தில் 2 நாட்கள் பொது விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது.

*மன்சுக் மாண்டவியா* (11)

சர்வதேச தரத்திற்கு இணையான பயிற்சிகள் நம் நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில், நாடு முழுவதும் விளையாட்டுத் துறை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என அவர் கூறினார். இதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாகவும், மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகவே சர்வதேச போட்டிகளில் இந்திய விளையாட்டு வீரர்கள் கூடுதல் பதக்கங்களை வென்று வருவதாகவும், டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

பிஜேபி கூட்டம் (10)

கடந்த 10 ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் ஆற்றிய பணிகளின் பலனால் தான் 3 ஆவது முறையாக மீண்டும் இக் கூட்டணி ஆட்சிக்கு வந்தது என மத்திய அமைச்சரும் பாஜக மூத்த தலைவருமான திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் நடைபெற்ற பாஜக செயற்குழு கூட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் இவ்வாறு கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான 3 ஆவது பதவிக் காலத்தில் நாட்டில் மும்மடங்கு வளர்ச்சியை ஏற்படுத்த முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார். இக் கூட்டத்தில், டெல்லி பாஜக தலைவர் திரு வீரேந்திர சச்தேவா, பாஜக நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு மனோஜ் திவாரி, திரு ராம்வீர்சிங் பிதுரி கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர்.

விக்ரவாண்டி (11)

தமிழகத்தில் விக்ரவாண்டி சட்டபேரவை தொகுதி இடைத் தேர்தலை ஒட்டி, வரும் 10 ஆம் தேதி விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, ஊதியத்துடன் கூடிய உள்ளூர் விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது. இத்தொகுதியில்

நாளை மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடையும் நிலையில், அங்கு அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். வாக்குப் பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறது. பாதுகாப்பு பணியில் மாநில காவல் துறையுடன், 3 கம்பெனி துணை ராணுவ படையினர் ஈடுபட்டுள்ளனர். விக்ரவாண்டி சட்டப் பேரவை தொகுதியில் வரும் 10 ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெறும் நிலையில், 13 ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட உள்ளன.

*பிரெஞ்ச் தேர்தல் (14)*

பிரான்ஸ் ஐரோப்பிய மக்களவை தேர்தலுக்கான முதல் சுற்று வாக்குப் பதிவு புதுச்சேரியில் கடந்த மாதம் 30 ஆம் தேதி நடைபெற்றது. இதில் புதுச்சேரி, காரைக்கால், சென்னை, கேரள பகுதிகளில் வசிக்கும் பிரெஞ்ச் குடியுரிமை பெற்றவர்கள் வாக்களிக்கும் வகையில், பிரான்ஸ் நாட்டு தூதரகம் சார்பில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தேர்தல் சுமுகமாக நடத்தப்பட்டது. இந்நிலையில், முதல் சுற்று தேர்தலில் 15 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் போட்டியிட்டதில், 12 விழுக்காடு வாக்குகள் பெற்று முதல் இரண்டு இடங்களை பிடித்த கட்சிகளுக்கு

இடையே, 2 ஆம் சுற்று தேர்தல் வாக்குப் பதிவு இன்று காலை 8 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது. இதற்காக பிரெஞ்ச் தூதரகம் சார்பில் புதுச்சேரி-காரைக்காலில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு மையங்களில் பிரெஞ்ச் குடியுரிமை பெற்றவர்கள் ஆர்வமுடன் தங்களது வாக்குகளை செலுத்தினர். சுமார் 4 ஆயிரத்து 535 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

*பட்ஜெட் (11)*

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் இம்மாதம் 22 ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 12 ஆம் தேதி வரை நடைபெற உள்ள நிலையில், பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனை கூட்டங்கள் நிறைவடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. நிதியமைச்சர் திரு நிர்மலா சீதாராமன் தலைமையில், கடந்த மாதம் 19 ஆம் தேதி தொடங்கி, ஜூலை 5 ஆம் தேதி வரை ஆலோசனை கூட்டங்கள் நடைபெற்றது. சிறு-குறு தொழில், வேளாண், திறன் மேம்பாடு, நிதி சேவைகள், எரிசக்தி உட்பட பல்வேறு துறை நிபுணர்கள் இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று, தங்களது கருத்துக்களை தெரிவித்துள்ளனர். நடப்பு ஆண்டிற்கான பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா

சீதாராமன் வரும் 23 ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்ய இருப்பது குறிப்பிடத் தக்கது.

*நீட்* (10)

இளநிலை மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வு தொடர்பான மனுக்களை உச்ச நீதிமன்றம் நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள 26 மனுக்கள் அடங்கிய தொகுதியை தலைமை நீதிபதி சந்திரசூட் மற்றும் நீதிபதிகள் பார்த்திவாலா, மனோஜ்மிஸ்ரா ஆகியோர்அடங்கிய அமர்வு விசாரணை மேற்கொள்ள உள்ளது. நீட் தேர்வு முறைகேடுகள் குறித்து, தனி மற்றும் சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும் என மாணவர்கள் தாக்கல் செய்த மனுவில் கோரப்பட்டுள்ளது. மேலும், நீட் தேர்வு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத் தக்கது.

*மாயாவதி*(9)

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என அக்கட்சியின் தேசிய

தலைவர் செல்வி மாயாவதி வலியுறுத்தி உள்ளார். இன்று சென்னையில் ஆம்ஸ்ட்ராங்கின் உடலுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பிறகு, இந்த வழக்கில் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கட்சி வலியுறுத்தும் என்றார். தமிழகத்தில் சமீபத்தில் நடந்த குற்றச் சம்பவங்களை சுட்டிக் காட்டிய அவர், பட்டியலின மக்களை பாதுகாக்கவும், சட்டம்-ஒழுங்கை பராமரிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநில அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

*பிஆர்டிசி* (12)

புதுச்சேரி புதிய பஸ் நிலையத்தினை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ், 31 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் புனரமைக்கும் பணி நடந்து வருகிறது. அதையடுத்து, கடந்த 16ம் தேதி முதல் ஏ.எப்.டி., மைதானத்திற்கு, புதிய பேருந்து நிலையம் தற்காலிகமாக மாற்றப்பட்டது. அனைத்து பேருந்துகளும் ஏ.எப்.டி., மைதானத்தில் இருந்து இயங்கப்பட்டு வருகிறது. பயணிகள் நலனுக்காக பி.ஆர்.டி.சி., பயணச் சீட்டு முன்பதிவு மையம் தற்காலிக பேருந்து நிலையத்தில் உள்ள ஹைமாஸ் விளக்கு மற்றும் பயணிகள் நிழல் பந்தல் அருகே அமைக்கப் பட்டுள்ளது. இந்த பி.ஆர்.டி.சி., பயணச்சீட்டு முன்பதிவு மையத்தில்

நாளை முதல் முன் பதிவு துவங்குகிறது. காலை 9:00 மணி முதல் முன் பதிவு செய்யலாம். இதுமட்டு மின்றி, BUS INDIA APP என்ற செயலி வழியாக பயணச் சீட்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் என, பி.ஆர். டி.சி., நிர்வாகம் அறிவித் துள்ளது.

தேர்வு (14)

மத்திய பணியாளர் தேர்வாணையம் சார்பில் 2024ம் ஆண்டுக்கான பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் உள்ள நேர்முக உதவியாளர் பதவி மற்றும் இஎஸ்ஐசி செவிலியர் அதிகாரி பதவிகளுக்கான போட்டி தேர்வு நாடு முழுவதும் இன்று நடைபெற்றது. அதன்படி, புதுச்சேரியில் நேர்முக உதவியாளர் பதவி தேர்வு, முத்தியால்பேட்டை பாரதிதாசன் மகளிர் கல்லூரியில் இன்று காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெற்றது. அரசு செயலரும், தேர்வு ஒருங்கிணைப்பாளரும் திரு நெடுஞ்செழியன், இணை ஒருங்கிணைப்பாளர் திரு யாசம் லட்சுமிநாராயண ரெட்டி, துணை ஒருங்கிணைப்பாளர்கள் திரு ஜெய்சங்கர், திரு கண்ணன், ஜிஎஸ்டி கூடுதல் ஆணையரும், பார்வையாளரும் காக்கர்லால் பிரசாந்த்குமார் ஆகியோர் தேர்வு மையத்தை ஆய்வு செய்தனர். இதைத் தொடர்ந்து,

இளஸ்ஜசி செவிலியர் அதிகாரி பதவிக்கான போட்டி இன்று மதியம் 2 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது.

கிரிக்கெட் (8)

இந்தியா-ஜிம்பாபே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது 20-20 கிரிக்கெட் போட்டி ஹராரேயில் இன்று மாலை 4.30 மணியளவில் தொடங்கியது. டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது. சற்று முன் வரை ------ ஓவரில், ---------விக்கெட் இழப்பிற்கு --------- ரன்கள் எடுத்திருந்தது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் ஜிம்பாபே, 1 க்கு பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இத்தொடரின் 3 ஆவது, 4 ஆவது மற்றும் 5 ஆவது போட்டிகள் முறையே, 10, 13, மற்றும் 14 ஆம் தேதி நடைபெற உள்ளன.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

உலக புகழ் பெற்ற பூரி ஜெகன்நாதர் கோவிலில் இன்று நடைபெற்ற ரத யாத்திரையில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கலந்து கொண்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை முதல், 3 நாள் அரசு முறை பயணமாக ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு செல்ல உள்ளார்.

விக்ரவாண்டி சட்டப் பேரவை இடைத் தேர்தல் பிரச்சாரம் நாளை முடிவடைய உள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

ஐரோப்பிய மக்களவை தேர்தலுக்கான 2 ஆம் சுற்று வாக்குப்பதிவு புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் இன்று நடைபெற்றது.